**உஹன பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

------------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின்படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஊழியர் கடன் ரூபா 290,401 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 359,959 ஆக ரூபா 69,558 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரிப் பதிவேட்டின் படி நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 3,388,928 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,056,490 ஆக ரூபா 1,332,438 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 80,073 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 186,839 ஆக ரூபா 106,766 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,566,803 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,420,583 ஆக இருந்த போதிலும், ரூபா 1,429,435 ஆக வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 8,852 தெகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 2,891,695 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,308,404 ஆக ரூபா 3,416,305 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் (நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 05) கீழ் வாடகை வருமானம் ரூபா 1,405,216 ஆக இருந்த போதிலும் ரூபா 1,536,764 ஆக ரூபா 131,548 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் இயந்திர உபகரணங்களுக்குரிய உதிரிப்பாகங்களின் கொள்வனவுகளின் ரூபா 461,270 தொகையான மீண்டெழும் தன்மையிலான செலவினங்கள் நிலையான சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய சம்பளம் ரூபா 34,065 மற்றும் செலுத்தவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 588,900 தொகைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்காது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக பல வருட காலமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்தப் பெறுமதியை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நானாவித கடன்கொடுத்தோர் | 54,358 | கடன்கொடுத்தோர் பதிவேடு மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| பொது வசதிகள் கடன்கொடுத்தோர் | 28,870 | |

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பிரதேச சபை விதிக்கோவை விதி 153 இன் பிரகாரம் வருமான நிலுவைப் பணம் தொடர்பான கூற்றொன்று பீ.எஸ்.07 படிவத்தின் பிரகாரம் பிரதேச சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,209,426 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,463,414 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 253,988 வீழ்சிசியொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 முத்திரைக் கட்டணம்

--------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,566,803 தொகையான முத்திரைக் கட்டணம் பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டியிருந்ததுடன் அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கைத்தொழில் வரி

-----------------------------------

பிரதேச சபையில் மெய்மையாய்வு மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிட வேண்டிய கைத்தொழில்களை கண்டறிவதற்கும் வரி அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

சில வருடங்களாக தலைமை அலுவலகத்தாலும் உப அலுவலகங்களினாலும் பேணிச் செல்லப்படுகின்ற நூலகங்களில் காணாமல் போன பெறுமதி இனங்காண முடியாத புத்தங்களின் எண்ணிக்கை 364 ஆகும். மேலும் சில வருடங்களாக ரூபா 3,700 பெறுமதியான புத்தங்கள் வாசகர்களினால் நூலகத்திற்கு கையளிக்கப்பட்டிராததுடன் அதற்குரிய நினைவூட்டலைச் செய்வதற்கோ அல்லது வேறெந்த நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதியான 2013 யூலை 21 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------------

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) நூலகப் புத்தகங்களின் கட்டுப்பாடு
(ஈ) நிலுவை வருமானங்களை அறவிடல்
(உ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல்